

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 239 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 27 – வெள்ளிக்கிழமை 10 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 239 : Thiruvalluvar Year - 2057 - Panguni 27 - Friday 10 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00


### புதுச்சேரி சட்டசபை தேர்தல்:

## விறுவிறுப்பான வாக்குபதிவு!

புதுச்சேரி, ஏப்.10 - புதுவை சட்டசபைக்கு கடந்த மாதம் 15ந் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட மறுநாளே வேட்புமனு தாக்கல் தொடங்கியது. கடந்த 26ந் தேதி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. புதுவையில் உள்ள 30 தொகுதிகளில் 34 தேசிய கட்சி வேட்பாளர்கள், 63 மாநில கட்சி வேட்பாளர்கள், 80 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சி வேட்பாளர்கள், 117 சுயேச்சை வேட்பாளர்கள்



என மொத்தம் 294 பேர் களத்தில் உள்ளனர்.

மாநிலம் முழுவதும் மொத்தம் உள்ள 30 தொகுதிக்கு ஆயிரத்து 99 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தது. இந்த ஓட்டுச்சாவடிகளுக்கு வாக்கு எந்திரங்கள், கட்டுப்பாட்டு எந்திரம், விவிபாட் ஆகியவை நேற்று முன்தினம் பிற்பகல் முதல் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டது. நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் வாக்கு பதிவு எந்திரங்களின் சீல் அகற்றப்பட்டது. பின்னர் மாதிரி வாக்கு பதிவு நடத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

தொடர்ந்து வாக்குபதிவை அதிகாரிகள் தொடங்கினர். வெயிலுக்கு பயந்து அதிகாலையிலேயே மக்கள் ஓட்டுச்சாவடிக்கு படையெடுத்தனர். கிராமப்புற ஓட்டுச்சாவடிகளில் ஓட்டுப்பதிவு தொடங்கும் முன்பே மக்கள் நீண்ட கியூ வரிசையில் காத்திருக்க தொடங்கினர்.

தொடர்ந்து விறுவிறுப்பான ஓட்டுப்பதிவு நடந்தது. அனைத்து ஓட்டுச்சாவடிகளிலும் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ படையினர், உள்ளூர் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். வாக்காளர்களுக்கு உதவ தன்னார்வ மாணவர்கள் பணியில் ஈடுபட்டனர்.

### தொகுதி மறுவரையறை: தென்னகத்தை விளிம்பு நிலைக்குத் தள்ளி

# சமூகநீதியை சிறுமைப்படுத்திட அரசியல் சதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஏப். 10 -**

**“தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னகத்தை விளிம்பு நிலைக்குத் தள்ளி சமூக நீதியை சிறுமைப்படுத்திட செய்திடும் அரசியல் சதித் திட்டம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான NDA அரசு நாடாளுமன்றத்தின் அடிப்படை அமைப்பையே திட்டமிட்டுச் சீர்குலைக்கிறது. விவாதங்களுக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் பதில் கூறுவதற்குமான தளமாக இருக்க வேண்டிய நாடாளுமன்றமானது, உறுப்பினர்கள் தங்கள் தொகுதி, மாநில மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்குக் கூட போதிய நேரமளிக்காத வெற்றுச் சம்பிரதாய அவையாகச் சுருக்கப்பட்டு வருகிறது.

### நாடாளுமன்றத்தின் தரம் குறையும்!

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான முன்மொழிவு, “குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்” என்ற அவர்களின் சொந்த முழக்கத்துக்கே எதிரானதாக அமைந்துள்ளது. இந்த முடிவினால் செலவுதான் கூடும், மக்களின் வரிப்பணம் வீணாகும், நாடாளுமன்றச் செயல்பாடுகளின் தரம் குறையும்.

மேலும், இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியமாக வரையறுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1க்கும் இது எதிரானது. மாநிலங்களின் குரலைப் புறக்கணித்துவிட்டு, முறையான கலந்தாலோசனையும் செய்யாமல் தவிர்த்துவிட்டுச் செயல்படுவது ஜனநாயகத்துக்கு எதிரானது. இது இந்தியாவின் பன்முக, கூட்டாட்சித் தன்மையைச் சிறுமைப்படுத்தும் ஒற்றைத்துவ எல்லைமீறலாகும்.

### தென்மாநிலங்களை தண்டிப்பதாகும்!

இதற்கெல்லாம் மேலாக, இந்தத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையானது பா.ஜ.க. ஆதிக்கம் செலுத்தும் வட மாநிலங்களுக்கு ஆதரவாக வலுவூட்டி, தென்மாநிலங்களின் குரலை நெரிக்கும். மூத்த தலைவர் திரு. சித்தராமையா அவர்கள் சீற்றத்தோடு கூறியது போல, இது நடுநிலையான நடவடிக்கை அல்ல, இது அரசியல் நோக்கம் கொண்ட திட்டமிட்ட கட்டமைப்பு மாற்றம். வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இருமடங்காகும் அதேவேளையில் தென்மாநிலங்களின் அளவு 24 விழுக்காட்டிலேயே தேங்கி நிற்கிறது. இது மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியதற்காகத் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் மற்றும் தெலங்கானா போன்ற மாநிலங்களைத் தண்டிப்பதாகும்.

இந்த நடவடிக்கையால் கூட்டாட்சி சிதைக்கப்பட்டு, அதிகாரம் ஒருசில பகுதிகளில் மட்டுமே குவிக்கப்படும் என்று சித்தராமையா, பினராயி விஜயன் மற்றும் ரேவந்த் ரெட்டி ஆகிய தென் மாநில முதலமைச்சர்கள் மிகச்சரியாக எச்சரித்துள்ளனர்.

### தேர்தல்களுக்கிடையே திணிக்க முற்படுவதா?

இது அவசரகதியில் தற்போது செய்யப்படுவதும் நம் அச்சத்தை அதிகமாக்குகிறது. பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் இத்தகைய முக்கிய நடவடிக்கையை மாநிலத் தேர்தல்களுக்கிடையே திணிக்க வேண்டிய



அவசியம் என்ன? தேர்தல் சார்ந்த கதையாடல்களை வடிவமைக்கவும், பெண் வாக்காளர்களிடம் செல்வாக்கு பெறுவதற்காகவும் 2024 நாடாளுமன்ற மக்களவைப் பொதுத்தேர்தலின் போது செய்த முந்தைய முயற்சிகளைப் போலவே இதுவும் அமைந்துள்ளது.

பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம். அதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால், பொறுப்போடு செயல்பட்ட மாநிலங்களைத் தண்டிக்கும் வகையில் தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே, அதை நடமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கோருகிறோம். அவர்களின் நோக்கம் உண்மையானதாக இருந்தால், இப்போதுள்ள தொகுதி அளவிலேயே மகளிருக்கான 33 இட ஒதுக்கீட்டை வழங்குவதை எதுவும் தடுக்கவில்லையே?

### பிரதிநிதித்துவத்துக்கு உத்தரவாதமில்லை!

இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்கு ஆதரவான சமூகநீதிக் காவலர் என்று ஒன்றிய அரசு தங்களை அழைத்துக்கொள்வதும் வெற்று முழக்கம்தான். ‘வளர்ந்த இந்தியா’ என ஒருபுறம் சொல்லிக்கொண்டே பல ஆண்டுகளாகக் கிரீமி லேயர் உச்சவரம்பை 8 லட்சம் ரூபாயில் இருந்து மாற்றாமல் வைத்திருந்து ஓ.பி.சி. மக்களுக்கு அவர்களுக்குரிய பங்கீடு கிடைக்காமல் வஞ்சித்தார்கள். இதர பிற்படுத்தப்பட்ட மகளிரின் பிரதிநிதித்துவத்துக்கான எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

2027 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் முதல்முறையாக நாம் அறியவுள்ள சாதிவாரி எண்ணிக்கை முடிவுகளைக் கூட பரிசீலிக்காமல் அவசரமாக அவர்கள் செயல்படுவது




இதில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை அம்பலப் படுத்துகிறது. இது அதிகாரமளித்தல் அல்ல, புறக்கணிப்புக்கு மாறுவேடம் போட்டுச் சீர்திருத்தம் என்கிறார்கள்.

மேலும், தொகுதி மறுவரையறைக்கான அடிப்படையாகக் கொள்ளப்போவது எது என்பதிலும் கொஞ்சம் கூட வெளிப்படைத்தன்மை இல்லை. 2021 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா அல்லது மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முந்தைய காலமான 1971ஆம் ஆண்டு எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா? மாற்றி மாற்றிப் பேசுவதும், வெற்று உத்தரவாதங்களும் நம் ஐயத்தை மேலும் அதிகரிக்கவே செய்கின்றன.

### கூட்டாட்சியியல் மீதான நேரடித் தாக்குதல்!

மொத்தத்தில் இந்த நடவடிக்கை மாநிலங்களின் மீது பெரும் நிதிச்சுமையை ஏற்றும், சட்டமன்றங்களை விரிவாக்கம் செய்ய அல்லது புதிதாகக் கட்டும் நிலைக்குத் தள்ளும். இவை அனைத்தும் முறையான கலந்தாலோசனை எதுவுமின்றி நடக்க இருக்கிறது. இது கூட்டுறவுக் கூட்டாட்சியியல் மீதான நேரடித் தாக்குதல் ஆகும்.

இவர்கள் செய்ய நினைப்பது சீர்திருத்தமே அல்ல, இது அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து, நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்தி, தென்னகத்தை விளிம்புநிலைக்குத் தள்ளி, சமூகநீதியைச் சிறுமைப்படுத்துவதற்கான தன்னிச்சையான அரசியல் சதித் திட்டம்!

ஏன் இந்த அவசியமற்ற அவசரம்? ஏன் மாற்றி மாற்றிப் பேசுகிறீர்கள்? இதனால் உண்மையாகப் பயனடையப் போவது யார்? எனும் கேள்விகளுக்கு நாட்டு மக்கள் முறையான விளக்கத்தைக் கோருகிறார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில் மேலும் மாபெரும் சாதனை! இந்தியாவின்

## காலணிகள் - தோல் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம்!

### தோல் பொருள்கள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 47 சதவீதம்! தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய ஊன்றுகோல்!

சென்னை, ஏப். 10 -

தமிழ்நாடு இந்தியாவின் காலணி மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தியின் தலைமையிடமாகத் திகழ்கிறது. இந்தியாவின் மொத்த தோல் ஏற்றுமதியில் 47 சதவீதமும், காலணி மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தியில் 38 சதவீதமும் தமிழ்நாடு மட்டுமே பங்களிப்பது உண்மையிலேயே ஒரு பெருமைக்குரிய சாதனையாகும்.

இந்தத் துறையில் 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பணிபுரிந்து வருவது, அவர்களுடைய குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு இத்தொழில் ஒரு வலுவான தூணாக விளங்குகிறது என்பதைக் காட்டுகிறது.

தோல் பொருள்கள் ஏற்றுமதி மூலம் 1.25 பில்லியன் டாலர் மதிப்புள்ள வருவாயை ஈட்டுவதன் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பிடத்தக்க மிகப்பெரிய பங்களிப்பை அளிக்கிறது. உலகளாவிய பிராண்டுகள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்த்து, குறிப்பாக பெண்கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான கொள்கைகளை வகுத்துச் செயல்படுவது, உள்ளடக்கிய மற்றும் நிலைத்தன்மையுள்ள வளர்ச்சியைத் தமிழ்நாடு உறுதிப்படுத்தியுள்ளது என்பதை உணர்த்துகிறது.

இந்தச் சாதனை, திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வைக்கும், சிறந்த நிர்வாகத்திறனுக்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியாகும்.

### “ஜீரோ பா.ஜ.க.” பிரச்சார பாடல் வெளியீடு!

## தமிழ்நாட்டில் குறுக்கு வழியில் ஊடுருவ பா.ஜ.க. முயற்சி!

### “நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்போம்!” என அமைச்சர் மனோ தங்கராஜ் பேட்டி!

சென்னை, ஏப். 10 –

தமிழ்நாட்டில் குறுக்கு வழியில் ஊடுருவ பா.ஜ.க. முயற்சி என அமைச்சர் மனோ தங்கராஜ் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மக்கள் பா.ஜ.க., தேர்தல் ஆணையம், ஒன்றிய விசாரணை அமைப்புகளுக்கு எதிராக போராடி வருவதாக பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அகில இந்திய மக்கள் இயக்கத்தின் ஜீரோ பாஜக பிரச்சார இயக்கம் தொடர்பான, செய்தியாளர் சந்திப்பு சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடைபெற்றது.

“ஜீரோ பா.ஜ.க.” என்ற பிரச்சார பாடல் வெளியீடு மற்றும் zerobjp.com என்ற இணையதளம் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முனைவர், பொருளாதார நிபுணர், பரகலா பிரபாகர், ஓய்வுபெற்ற நீதியரசர் அரி.பரந்தாமன், அமைச்சர் மனோ தங்கராஜ், வழக்கறிஞர் வாஞ்சிநாதன், சுற்றுச்சூழல் ஆர்வலர் கனகராஜ், பாலகிருஷ்ணன், Frontline பத்திரிக்கை ஆசிரியர் விஜய் சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அப்போது பேசிய மனோ தங்கராஜ், தமிழ்நாட்டில் குறுக்கு வழியில் ஊடுருவ பா.ஜ.க. அனைத்து சதிவேலைகளிலும் ஈடுபடுவதாக குற்றம் சாட்டினார்.

இதைத்தொடர்ந்து பேசிய பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் மிகமிக முக்கியமானது என்று கூறியுள்ளார். தமிழ்நாடு மக்கள் பா.ஜ.க.வை எதிர்த்து மட்டும் சண்டையிடவில்லை என்றும் பா.ஜ.க., இந்திய தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசு, ஒன்றிய விசாரணை அமைப்புகளுக்கு எதிராகப் போராடி வருவதாகத் தெரிவித்தார்.

அசாம் மற்றும் பீகாரில் உயரதிகாரிகளை தேர்தல் ஆணையம் ஏன் மாற்றவில்லை? என்று ஓய்வுபெற்ற நீதிபதி ஹரி பரந்தாமன் கேள்வி எழுப்பினார். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்காதது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு போதிய நிதி ஒதுக்காதது, கீழடி அகழ்வாராய்ச்சியை ஏற்காதது என தமிழ்நாட்டிற்கு எதிராக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைப் புறக்கணிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.



NDA என்றால் No Development Alliance; திராவிட மாடல் வளர்ச்சியின் வடிவம்,

இனம் மொழி பண்பாட்டின் அடையாளம்; வெல்வோம் ஒன்றாக, வேண்டும் ஸ்டாலின் !

